# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2012 ஜுன் திங்கள் 29.06.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**
**குளச்சல் நகராட்சி நகர்மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.**

(1) குளச்சல் ஏ.வி.எம். சானலை சுத்தம் செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.
(2) துறைமுக பகுதிக்கு செல்லும் ஏவி.எம்.சானலின் குறுக்கே உள்ள பாலத்தை சரி செய்யவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

குளச்சல் நகரப்பகுதியில் உள்ள ஏ.வி.எம். சானல், நகராட்சி பகுதியின் நீர் ஆதாரத்திற்கு ஒரு முக்கிய சான்று. சமீப காலமாக இந்த கால்வாய் பாசி பிடித்ததும், சகதி நிறைந்தும் காணப்படுகிறது. இதன் காரணமாக குடிநீரின் சுவை மிகவும் குறைந்துள்ளது. அதேபோன்று துறைமுகப் பகுதிக்கு செல்லும் மரமடி பகுதியில் அமைந்துள்ள பாலத்தின் கண்மாய் அடைக்கப்பட்டு நீர் ஓடிச் செல்கின்ற நிலையில் இல்லை. ஜுன், ஜுலை மாதங்களில் மழை பெய்யும் நிலையில் இந்த பாலத்தின் அருகிலுள்ள வீடுகளில் தண்ணீர் புகும் அபாயம் உள்ளது. எனவே ஏ.வி.எம்.சானலை தூர் வாரவும், பாலத்தை செப்பனிடவும், போர்க்கால அடிப்படையில் பணிகளை செய்திட, பொதுப்பணித்துறையையும், மாவட்ட நிர்வாகத்தையும் கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்:272. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள், கவியரசு கண்ணதாசன் வணிக வளாக காலியாக உள்ள கடைகளுக்கு 06.06.2012 அன்று மறு ஏலம் கோரப்பட்டது. காலியாக உள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகளில் கடை எண். 26–க்கு திரு.அப்துல் றஹீம், கதவு எண்.27–க்கு திரு.அன்வர் அலி, கடை எண்.28–க்கு திரு.ஷாகுல் ஹமீது, கடை எண்.29–க்கு திரு.அப்துல்காதர், கடை எண்.30–க்கு திரு.கோபால கிருஷ்ணன் ஆகியோர் முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டுள்ளார்கள். போட்டியாளர் எவரும் இல்லை. ஏலதாரர் அரசாங்க மதிப்புக்கு ரூ.1500/–க்கு கடையினை ஏலம் கோரியுள்ளனர். கடைகளை ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. எனவே ஏலதாரர் கோரிய அரசாங்க மதிப்புக்கு நகராட்சியின் வருவாய் இழப்பினை கருத்தில் கொண்டு கடையினை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : அரசாங்க மதிப்பு ரூ.1500/–க்கு கேட்டுள்ள ஏலதாரர்களுக்கு உரிமம் வழங்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.அ1/2035/2002)

**தீர்மானம் எண்:273. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினிலாரி எண். TN-74-Z-2339–ல் ஹைட்ராலிக் ஜாக்கியின் ஆயில் சீல் மற்றும் ஹைட்ராலிக்கிட், ரேடியேட்டர் இன்ஜின்பெட் ஆகியவைகள் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்வதற்கு ரூ.20,000/– உத்தேச செலிவில் அவசர அவசியம்

கருதி நகராட்சி சட்டம் 15–ன்கீழ் மேற்காணும் பணியினை மேற்கொள்ளப்பட்டு அதற்கான தொகை ரூ. 19,950/– வழங்கப்பட்டது. எனவே மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/4008/2010)

**தீர்மானம் எண்:274. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமூக பொருளாதார மற்றும் ஜாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி தொடர்பாக பணி மைய (சார்ஜ் சென்டர்) தேவைக்காக, அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று கீழ்க்கண்ட பொருட்கள் வாங்கப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | ACT Automation<br>DGS&D Rate-ல் வாங்கப்பட்ட<br>கணனி – 2 எண்ணம் | ரூ. 60,847/– |
| 2 | BIJU Agencies<br>BSNL Modum | ரூ. 2,250/– |
| 3 | ANITA Furniture Land<br>4 x 2 - Table - 1 No.<br>3 x 1 ½ - Computer table – 1 No. | ரூ. 3,050/– |
| 4 | AMALA Electricials<br>Extension Box &<br>4 x 4 Electricial Board | ரூ. 730/– |
| | Total | ரூ. 66,877/– |

மேற்காணும் பொருட்கள் வாங்கிய விபரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.அ2/3762/2011)

**தீர்மானம் எண்:275. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்குட்பட்ட மாதாகாலனியில் உள்ள அங்கன்வாடி மைய பராமரிப்பு மற்றும் மதில் சுவர் கட்டும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.70,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.188, நாள் 30.03.2012–ன்படி ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 19.04.2012 மற்றும் 10.05.2012 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் ஒப்பந்தப்புள்ளி அளிக்காததால் 06.06.2012 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன :

| | | |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர் | 0.10% மதிப்பீட்டைவிட குறைவு<br>**(ரூ. 68,640/–)** |
| 2 | திரு.பி. தங்கமணி<br>ஒப்பந்தத்தாரர் | 0.10% மதிப்பீட்டைவிட கூடுதல்<br>**(ரூ. 68,782.50)** |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.10% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1036–1/2012)

**தீர்மானம் எண்:276. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட மாதாகாலனியில் பாம்பூரி வாய்க்கால் பெண்கள் குளிக்குமிட படித்துறையை சரி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.70,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.189, நாள் 30.03.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 19.04.2012 மற்றும் 10.05.2012 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் ஒப்பந்தப்புள்ளி அளிக்காததால் 06.06.2012 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன :

| | | |
|---|---|---|
| 1 | திரு.பி. தங்கமணி ஒப்பந்தத்தாரர் | 0.09% மதிப்பீட்டைவிட கூடுதல் (ரூ. **69,376/–**) |
| 2 | திரு.ஆர்.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | 0.19% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ. **69,184/–**) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.19% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1036/2012)

**தீர்மானம் எண்:277. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட மாதாகாலனியில் பாம்பூரி வாய்க்கால் அருகில் 8" கழிவுநீர் குழாய் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.53,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.190 நாள் 30.03.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 19.04.2012 மற்றும் 10.05.2012 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் ஒப்பந்தப்புள்ளி அளிக்காததால் 06.06.2012 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன :

| | | |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | 0.50% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ. **50,436/–**) |
| 2 | திரு.பி. தங்கமணி ஒப்பந்தத்தாரர் | 0.07% மதிப்பீட்டைவிட கூடுதல் (ரூ. **50,724/–**) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.50% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1036/2012)

**தீர்மானம் எண்:278. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்குட்பட்ட 23—வது வார்டு நரிக்கல் பகுதியில் பாம்பூரி வாய்க்காலில் ஆண்கள் குளிக்குமிட படித்துறையை சரி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.80,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.187, நாள் 30.03.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 19.04.2012 மற்றும் 10.05.2012 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் ஒப்பந்தப்புள்ளி அளிக்காததால் 06.06.2012 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன :

| | | |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர் | 0.10% மதிப்பீட்டைவிட குறைவு<br>**(ரூ. 73,532 /—)** |
| 2 | திரு.பி. தங்கமணி<br>ஒப்பந்தத்தாரர் | 0.21% மதிப்பீட்டைவிட கூடுதல்<br>**(ரூ. 73,762/—)** |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.10% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/235/2012)

**தீர்மானம் எண்:279. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10—ல் மீன் விற்கும் பிளாட் அருகில் உள்ள மீனவர் ஓய்வறையின் தரைப்பகுதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. எனவே அதனை உடைத்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக காங்கிரீட்டால் தரை அமைத்து டைல்ஸ் பதிப்பதற்கும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 1,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2610/2012)

**தீர்மானம் எண்:280. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாங்கரை நடுநிலைப்பள்ளி அருகில் சாஸ்தாங்கரை சாலையிலிருந்து சிங்கன்காவு செல்லும் தெருவில் கழிவுநீர் மற்றும் மழைநீர் சீராக வெளியெ செல்ல முடியாமல் தேங்கி நிற்கும் நிலை உள்ளதால் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தொற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் நலனை கருத்தில் கொண்டு மேற்படி தெருவில் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 3,20,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2609/2012)

**தீர்மானம் எண்:281. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தையில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடத்தில் அரசின் உத்தரவுப்படி, முதியோர்களும், மாற்று திறனாளிகளும் எளிதாக உபயோகிக்கும் வகையில் கழிப்பிடம் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடத்தில் காணப்படும் சேதமடைந்து இரும்பு பைப்புகள் மற்றும் தகரஷீட்டுகள் ஆகியவற்றை ரூ.15,000/– மதிப்பீட்டில் அகற்றுவதற்கு 11.07.2012 அன்று ஏலமிடுவதற்கு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஏல அறிவிப்பு வெளியிடப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/2611/2012)

**தீர்மானம் எண்:282. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

(ஓம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 ஜுன் திங்கள் 29.06.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு 4–ல் சுனாமி குடியிருப்பில் உள்ள வரிவிதிப்பு கட்டிடங்கள் ரூ.611 மற்றும் ரூ.749/–ல் உள்ளது. இக்கட்டிடம் 2008–09–க்கு முன்னர் Zone-B-யில் மதிப்பு ரூ. 2.05 ஆக இருந்தது. தற்போது சொத்துவரி சீராய்வுக்கு பின் 2008–09 Zone-C-யில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே 2008–09 முன் Zone-B-யில் உள்ள கட்டிட விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வரிவிதிப்பாளர் பெயர் | கதவு எண். | வரிவிதிப்பு எண். | வரித்தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.கில்பர்ட் & சஜன் | 4–402 | 9960 | 611 |
| 2 | திரு.டென்சன் & விமலா | 4–474 | 9976 | 611 |
| 3 | திரு.தாமஸ் & அஜிதா | 4–397 | 10102 | 736 |
| 4 | திரு.வர்க்கீஸ் & ஜெசிந்தா | 4–762 | 9687 | 749 |
| 5 | திரு.அகஸ்டின் & புஷ்பம் | 4–807 | 9711 | 749 |
| 6 | திரு.நித்தியகுருசு & லூர்துமேரி | 4–787 | 9749 | 749 |
| 7 | திரு.சுனில் & மஞ்சு | 4–806 | 9860 | 749 |
| 8 | திரு.பீட்டர் & பத்றோசாள் | 4–760 | 9874 | 749 |
| 9 | திரு.பத்றோஸ் & ஷீஜா | 4–739 | 9923 | 687 |
| 10 | திரு. வால்டர் & ராணி | 4–724 | 10001 | 611 |
| 11 | திருமதி. மேரி ரூபி | 4–679 | 10056 | 739 |
| 12 | திரு. பெனடிக்ட் & சுமதி | 4–684 | 9858 | 749 |
| 13 | திரு.சகாயபிச்சை & சகாயராணி | 4–687 | 9910 | 749 |
| 14 | திரு.சிலுவை & பத்றோசாள் | 4–578 | 9965 | 611 |
| 15 | திரு.ஜார்ஜ் & ஜான்சி சகாயராணி | 4–815 | 9890 | 749 |
| 16 | திரு.அந்தோணி & அருள்சீலி | 4–825 | 9970 | 611 |
| 17 | திரு.நசரேன் | 4–633 | 9594 | 611 |
| 18 | திரு.சேகர் பெஞ்சமின் ஜெயபால் | 4–686 | 9880 | 749 |
| 19 | திரு.சில்வரீஸ் ஆன்சன் | 4–408 | 9959 | 611 |
| 20 | திரு.செல்வராஜ் | 4–376/19 | 9773 | 908 |

இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமி குடியிருப்பு பகுதி எபிக்கோர் காலனியில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு சொத்துவரி விதிக்கும் போது Zone-B-யில் ரூ. 2.00 மதிப்பில் போடப்பட்டுள்ளது. தற்போது இக்கட்டிடம் 2008–09–ல் சொத்துவரி மறுசீராய்வின் மூலம் Zone-C-யில் மாற்றம் செய்யப்பட்டது. அதன் மதிப்பு 0.75 பைசாவாக உள்ளது. எனவே கட்டிட வரிவிதிப்புகளை Zone-C-யில் வரி விதிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/1260/2012)

**தீர்மானம் எண்:283. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் மேலாளராக பணிபுரியும் திரு.பூ.சந்திரன், வகுப்பு V–லிருந்து வகுப்பு IV–க்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 51426/2011/கே2 நாள் 18.05.2012 –ன்கீழ் புளியங்குடியில் உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.பூ.சந்திரன் என்பவரை குளச்சல் நகராட்சிக்கு மேலாளராக பதவி உயர்வு வழங்கி பணிமாறுதல் செய்யப்பட்டது. அன்னாரின் பணிமாறுதல் பயணப்பட்டியல் ரூ.10,322/– சமர்ப்பித்துள்ளதை நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்:284. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி நகர்மன்ற கூடத்தில் மைக்செட் மற்றும் தரைவிரிப்பு அமைப்பதற்கும், அதற்கான வயரிங் பணிகள் செய்வதற்கும், நகர்மன்ற தலைவர் அறையில் குளிர்சாதன வசதி செய்வதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ 2,75,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2649/2012)

**தீர்மானம் எண்:285. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தில் பயணிகள் உபயோகத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் இருக்கைகள் உடைந்த நிலையில் உள்ளது. எனவே பயணிகளின் வசதிக்காக உடைந்த இருக்கைகளை சரி செய்வதற்கும், மூன்று பேர் அமரக்கூடிய வகையில் இரண்டு செட் இருக்கைகளை புதிதாக வாங்குவதற்கும், மேலும் பேருந்து நிலையத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு கருவியில் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்யவும், அதனை பாதுகாப்பாக வைப்பதற்கு பாதுகாப்பு கூண்டு அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.55,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2648/2012)

**தீர்மானம் எண்:286. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20–ல் செட்டிவிளை பகுதியில் மழைநீர் வடிகால் ஓடையில் மண் நிரம்பி கழிவுநீர் சீராக செல்ல முடியாமல் தேங்கி நிற்பதால் அப்பகுதி பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி வடிகால் ஓடையில் பராமரிப்பு பணிகள் மற்றும் மூடு சிலாப் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,30,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2667/2012)

**தீர்மானம் எண்:287. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆழ்துளை கிணறு எண்.6, 11, 12, 10, 18 ஆகியவற்றில் மெயின் சுவிட்ச் மற்றும் Fuse carrier பழுதடைந்துள்ளது. மேலும் ஆழ்துளை கிணறு எண்.14–ல் உள்ள Cable wire பழுதடைந்து மின்மோட்டார் இயங்காத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட பழுதுகளை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.20,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2574/2012)

**தீர்மானம் எண்:288. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, துறைமுகத்தெரு கோயில் முன் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மாதாகாலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கொட்டில்பாடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சுனாமி சிங்காரவேலன் காலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீரின் நலன் கருதி மூடி அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.15,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2612/2012)

**தீர்மானம் எண்:289. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் சம்ப் அருகில் உள்ள துறைமுக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் ஆழ்துளை கிணறு எண்.13–யில் உள்ள Cable wire பழுதடைந்துள்ளது. இதனால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக வழங்க முடியவில்லை. எனவே ஆழ்துளை கிணறு எண்.13–லிருந்து வெள்ளிப்பிள்ளையார் கோவில் பம்பு ரூமில் உள்ள சர்வீஸ் உடன் Cable wire–ஐ இணைப்பதற்கும், மேலும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் சம்ப் அருகில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு எண்.20–க்கு Bore bit அமைத்து மூடி அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.60,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2614/2012)

**தீர்மானம் எண்:290. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட யானைக்கால் மருத்துவமனை அருகில் உள்ள 80mm gate valve பழுதடைந்துள்ளதை மாற்றி 80mm Sluice valve அமைப்பதற்கும், செட்டித்தெரு, கே.பி.ராஜன் வீடு அருகாமையில் பழுதடைந்துள்ள 3" Sluice valve–ஐ மாற்றுவதற்கும், D.S.P.அலுவலகம் முன்னால் உள்ள 3" Sluice valve –ஐ மாற்றுவதற்கும், பள்ளிரோட்டில் ஆண்டிப்பிள்ளை தெருவுக்கு திறக்கும் 3" Sluice valve –ஐ மாற்றுவதற்கும், வாய்க்கால் தெரு, தெற்கு தெரு, களிமார் திறக்கும் 5" Sluice valve–ஐ மாற்றுவதற்கும், வெள்ளியாகுளம் இறுதியில் குடிநீர் விநியோகம் சீராக இல்லாததால் ஜோசப் பள்ளி அருகில் புதியதாக 3" Sluice valve அமைப்பதற்கும், வண்ணாத்தி விளைக்கு குடிநீர் விநியோகம் சீராக இல்லாததால் பள்ளிவிளாகத்தில் 80mm Sluice valve புதிதாக அமைப்பதற்கும், நரிக்கல் மற்றும் பூக்குழி பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீராக இல்லாததால், கணியாக்குடி சாலையில் 80mm Sluice valve அமைப்பதற்கும், ஒற்றைக்கண் பாலத்தின் மேற்கு பக்கம் பூக்குழி சாலையில் 50mm Sluice valve அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.62,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2573/2012)

**தீர்மானம் எண்:291. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள ஆழ்துளை கிணறு எண்.4, 5 மற்றும் பர்னட்டிவிளை திருப்பில் உள்ள ஆழ்துளை கிணறு எண்.10 ஆகியவற்றில் உள்ள மின்மோட்டார்கள் பழுதடைந்து இயங்காத காரணத்தினால் குடிநீர் விநியோகம் சீராக வழங்க முடியவில்லை. எனவே அலுவலக இருப்பில் உள்ள மூன்று புதிய மின்மோட்டார்களை மேற்படி மூன்று ஆழ்துளை கிணறுகளில் இறக்கி குடிநீர் விநியோகம் வழங்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.17,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2613/2012)

**தீர்மானம் எண்:292. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி